<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>

நாள்: 24.10.2025, அ.வ.எண். 76/2012, வா.சா.1. சண்முகம், த/பெ. அய்யாசாமி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) எனக்கு எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால் 12 ஏக்கர் உள்ளது. 12 ஏக்கர் பூமியும் ஒரே சக்குபந்தியாக உள்ளது என்றால் வெவ்வேறாக உள்ளது. தாவாவில் குறிப்பிட்டுள்ள பூமி எத்தனை ஏக்கர் பூமி என்றால் 4 1/2 ஏக்கர் ஆகும். 4 1/2 ஏக்கர் பூமி எனக்கு எந்த வகையில் வந்தது என்ற விவரத்தை தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா சா ஆ 1 ஆவணம் நான் தாக்கல் செய்த கிரயப்பத்திரம் என்றால் சரிதான். வா சா ஆ 1 ஆவண சொத்து விவரத்தில் வண்டித்தடம் கண்டு எழுதியுள்ளதா என்றால் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.